# அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம், லோறன்ஸ்கூக்
## ANNAI POOPATHI TAMILSK KULTURSENTER, LØRENSKOG
## ANNAI POOPATHI  TAMIL CULTURAL CENTER, LØRENSKOG

**அனைவருக்கும் வணக்கம்,**

அன்னை பூபதி தமிழ்க் கல்விக்கூடங்கள் மற்றும் தமிழர் வள ஆலோசனை மையம் இணைந்து நடாத்தும் தைப்பொங்கல் 2024 விழா 13.01.2024 சனிக்கிழமை நடைபெறவுள்ளது. இந்நிகழ்விற்காக இவ்வாண்டு குலுக்கல் முறையில் எமது வளாகத்திற்கு கிடைத்துள்ள நிகழ்வு நாடகம். ஆனால் வேறு வளாகமொன்றிலிருந்து தங்களிடம் குறைந்த எண்ணிக்கையில் மாணவர்கள் இருப்பதால் தங்களுக்குக் கிடைத்த கூத்துநடனத்தினை எம்முடன் மாற்றக் கேட்டதற்கிணங்க நாம் ஒப்புதலளித்துள்ளோம்.



இந்த கூத்துநடனத்திற்காக நாம் 5ஆம் வகுப்பிலிருந்து 10ஆம் வகுப்பு வரையுள்ள மாணவர்களை இணைக்கவுள்ளோம். ஆர்வமுள்ள விரும்பிய மாணவர்கள் அனைவரும் தங்களின் பெயர்விபரங்களை வகுப்பாசிரியர்களினூடாக எதிர்வரும் 23.11.2023 இற்கு முன்னதாகப் பதிவு செய்யுமாறு வேண்டுகின்றோம். பதிவுசெய்யும் மாணவர்களுக்காக தனியாக வைபர்குழுமம் ஒன்று உருவாக்கப்பட்டு தகவல் வழங்கப்படும்.

**பதிவுசெய்யும் மாணவர்களுக்கான விதிமுறைகள்**

1. மேற்குறிப்பிட்ட திகதிக்கு முன் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

2. பயிற்சி நடைபெறும் நாட்களில் ஒழுங்காக வருகை தரவேண்டும். உடலநலம் மற்றும் தகுந்த காரணம் தவிர்ந்த வேறு காரணங்களினால் வருகை தரமுடியாமல் போனவர்கள் நிகழ்விலிருந்து நீக்கப்படுவர்.

3. நிழற்படம் மற்றும் ஒளிப்பதிவிற்கான ஒப்புதல் ஏற்கனவே நிர்வாகத்தினருக்கு வழங்கியவர்களாக இருத்தல் வேண்டும். அன்றேல் கூத்துநடனத்திற்கான பயிற்சிகளுக்கு முன் நிர்வாகத்திற்கு வழங்கியிருத்தல் வேண்டும்.

4. தங்கள் தங்கள்  வேடங்களுக்குரிய பொருட்களைத் தாமே எடுத்தல் வேண்டும். பரிந்துரையும் ஆலோசனையும் வழங்கப்படும்.

தங்களின் பதிவுகளை விரைவாகச் செய்து திட்டமிடலுக்கு உதவுமாறு வேண்டுகின்றோம். மேலதிக விபரங்களை ஆசிரியர்களிடம் அறிந்துகொள்ளலாம்.

நன்றி.

இவ்வண்ணம்
கலை - நிர்வாகம்
அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் லோறன்ஸ்கூக்